நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை 5 அவர்களின் செயல்முறைகள்.
முன்னிலை. டாக்டர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப.,

ooOoo

ந.க.எண்.33815/2009/எப்1 நாள். 15.3..2010.

பொருள். பணிக்குழு – தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி – நகராட்சி பொறியாளர் நிலை–1, / செயற்பொறியாளர்கள் / மண்டல செயற்பொறியாளர்கள் பணியிட மாற்றம் செய்தல் – சம்பந்தமாக.

படிக்கப் பட்டவை

1) அரசாணை (ப) எண்.503, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப3(1)) துறை, நாள்.2.12.2008.
2) திரு பொ.தங்கமணி, செயற்பொறியாளர் பணி மாறுதல் கோரும் விண்ணப்பம் நாள்.10.2.2010.
3) திரு கே.ரவி, நகராட்சி பொறியாளர் நிலை–1, அம்பத்தூர் நகராட்சி கடித நாள். 12.3.2010.

ஆணை.

தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதி 31 (சி) விதிகள் 1970ன் கீழ் நிர்வாக நலன் கருதியும், படிக்கப்பட்டவை ஒன்றில் காணும் அரசாணையில் செயற்பொறியாளர்களை பணியிட மாறுதல் வழங்கும் அரசுக்கு உள்ள அதிகாரத்தினை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டதன் அடிப்படையிலும் செயற்பொறியார்களை, கீழ்க்கண்டவாறு பணியிட மாறுதல் செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | செயற்பொறியாளரின் பெயர் | தற்போது பணிபுரியும் இடம் மற்றும் பதவி | மாறுதல் செய்யப்படும் இடம் மற்றும் பதவி |
|---|---|---|---|
| 1. | திரு. பொ. தங்கமணி | பொதுமேலாளர் (தொழில் நுட்பம்) JNNURM நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் | நகராட்சி பொறியாளர் நிலை–1 (செயற்பொறியாளர்) அம்பத்தூர் நகராட்சி. (திரு கே.ரவி, நகராட்சி பொறியாளர் மருத்துவ விடுப்பு – காலிப்பணியிடத்தில்) |

2) சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர், / மேற்கண்ட பொறியாளரை பணியிலிருந்து விடுவித்த / பணி சேர்ந்த நாளினை இவ்வலுவலகத்திற்கு உடன் தெரிவிக்குமாறு கோரப்படுகிறது.

3) திரு பொ.தங்கமணி அவர்களின் சுய விருப்பத்தின் பேரில் மாற்றப்படுவதால் மாறுதல் பயணப்படி வழங்கப்பட மாட்டாது,

4) இச்செயல்முறை ஆணை பெற்றுக் கொண்டமைக்கான ஏற்பளிப்பினை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/– ப.செந்தில்குமார்,
நகராட்சி நிர்வாக இயக்குநர்

பெறுநர்
திரு பொ.தங்கமணி,
பொது மேலாளர் (தொழில்நுட்பம்), நகராட்சி நிர்வாக இயக்ககம்.
நகல் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், செங்கல்பட்டு
நகராட்சி ஆணையர், அம்பத்தூர்.
தலைமை பொறியாளர் / கூடுதல் இயக்குநர்
அந பிரிவு / TNUDP-III கண்காணிப்பாளர். (உடன் பணி விடுவிப்பு செய்ய)
இவ்வலுவலக வலைதளத்தில் பதிவு செய்ய
/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்.